DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : STC 125/2021

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ஸ்வேதா |
| Father / Husband Name | ராமநாதன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 19.11.2024

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கோவிலம்பாக்கத்தில் குடியிருந்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். எனது தந்தை சாட்சி ராமநாதன் என்பவர் 27.09.2012 ம் தேதி இறந்துவிட்டார். கடந்த 17.07.2012 ம் தேதி மாலை 4.00 மணிக்கு நானும் எனது அண்ணன் ஹரிகரன் மகாதேவன் மற்றும் அப்பா ராமநாதன், அம்மா ஜெயந்தி மற்றும் சகோதரி ஆனந்தவள்ளி ஆகியோர் மடிப்பாக்கத்தில் இருந்து TN 22 AR 6217 என்ற டாடா இன்டிகோ கார் வாகனத்தில் மதுரைக்கு சென்றோம். கருங்குழி கிராமம் அருகே GST சாலையில் சென்றபோது எங்கள் வாகனத்திற்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்த லாரியை முந்தி செல்வதற்காக எனக்கு பின்னால் இருந்து வந்த அரசு பேருந்து எங்கள் வாகனத்தின் இடது பக்கமாக இடித்து முந்தி சென்றது. நான் சென்ற வாகனத்தின் இடது பக்கத்தின் முன் பகுதி முழுவதும் சேதம் அடைந்தது. அதில் பயணம் செய்த எனது தந்தைக்கு தலையில் அடிபட்டது. கருவுற்றிருந்த எனது தங்கைக்கு அபாஷன் ஆகிவிட்டது.

2. காயம்பட்ட எனது அப்பா மற்றும் சகோதரியை 108 ஆம்புலன்ஸ் மூலம் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் தான் அரசு பேருந்தின் ஓட்டுநர் ஆவார். **(எதிரி ஆஜர் இல்லாததால் வழக்கு கோப்பில் இருக்கும் எதிரியின் புகைப்படம் காட்டப்பட்டது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**3.** நாங்கள் சென்ற வாகனத்தை நான் தான் ஓட்டினேன். நான் வாகனத்தை ஓட்டியது குறித்து புகார் மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அசாஆ 1 புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் வலது ஓரத்தில்

செங்கல்பட்டு என்று எழுதப்பட்டுள்ளது தேதி 17.07.2012 என்று உள்ளது என்றால் சரிதான். புகாரில் மணி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் புகார் கொடுத்தபோது திருத்தம் எதுவும் செய்யவில்லை. இரண்டாவது பக்கத்தில் முதல் வரியில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை நான் தான் செய்தேன். புகாரை எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. ஆம்புலன்ஸ் மூலம் எந்த அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை மதுராந்தகம் என்று நினைக்கிறேன். விபத்தில் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

4. புகாரில் மருத்துவமனை குறித்த விவரம் சொல்லியுள்ளேனா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விபத்து நடந்த 10 நாட்களுக்குள் விசாரித்தார்கள். அரசு பேருந்தின் ஓட்டுநரை எங்கு பார்த்தேன் என்றால் சம்பவ இடத்திலேயே பார்த்தேன். அந்த விவரத்தை புகார் மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நாங்கள் பயனம் செய்த சாலை தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். எங்கள் மீது மோதிய பேருந்து கனரக வாகனம் என்றால் சரிதான். என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் எனது உறவினர்கள் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.